கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
கலைப்பீடம்
முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை, பருவம் I - 2018/19
SOC 1101 – சமூகவியலின் அடிப்படைகள்
**இரண்டு மணித்தியாலங்கள் (02)**
**நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. (i) கடினமான விஞ்ஞானத்திற்கும் (Hard science) மென்மையான விஞ்ஞானத்திற்கும் (Soft science) இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) நேர்காட்சிவாதிகளின்படி, சமூகத்தை எவ்வாறு விஞ்ஞான ரீதியாகக் கற்கலாம்? (03 புள்ளிகள்)

(iii) சமூகவியலாளர்கள் சமூகக் கற்கையில் ஈடுபடுகையில் முற்றிலும் புறவயத்தன்மையுடன் இருப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக நீங்கள் நம்புகின்றீர்களா? சமூகக் கற்கையின் சவால்களைக் குறிப்பிட்டு, உமது விடையினை விளக்குக. (10 புள்ளிகள்)

02. (i) சமூகவியல் நோக்குநிலை (Sociological perspective) என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) முரண்பாட்டு நோக்குநிலையிலிருந்து ஒருமைப்பாட்டு/செயற்பாட்டு நோக்குநிலை எவ்வாறு வேறுபடுகின்றது? (03 புள்ளிகள்)

(iii) ஒரு குறிப்பிட்ட சமூக நிகழ்வினை, ஒருமைப்பாட்டுவாதியும்/செயற்பாட்டுவாதியும் முரண்பாட்டுவாதியும் எவ்வாறு பகுப்பாய்வு செய்கின்றனர் என்பதை ஒரு உதாரணத்தை எடுகோளாகக் கொண்டு ஒப்பிட்டுக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

03. (i) விஞ்ஞான ரீதியான முறை என்றால் என்ன? (02 புள்ளிகள்)

(ii) ஒரு நிகழ்தகவு மாதிரியானது ஒரு நிகழ்தகவற்ற மாதிரியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? (03 புள்ளிகள்)

(iii) நீங்கள் குற்றவாளிகளின் செயற்பாடுகள் பற்றிய பங்குபற்றல் ஆய்வுக் கற்கையொன்றைச் செய்ய வேண்டுமெனக் கொள்க. அதன்போது, நீங்கள் எதிர்கொள்ள நேரிடும் ஒழுக்கவியல்சார் பிரச்சினைகள் எவை? உங்கள் ஆய்வுப் பெறுபேறு பாதிக்கப்படாத வகையில் இப்பிரச்சினைகளைத் தவிர்க்க முடியுமா? உங்களது விடைக்கான காரணங்களைத் தருக. (10 புள்ளிகள்)

04. (i) குடும்பம் என்றால் என்ன என வரைவிலக்கணப்படுத்தி, அதன் பிரதான பண்புகளை விளக்குக. (02 புள்ளிகள்)

(ii) "குடும்பம் உலகளாவியது" இக் கூற்றின் கருத்து என்ன? (03 புள்ளிகள்)

(iii) குடும்பமானது சமூகத்தைப் போன்றே தனிநபருக்கும் நேர்மறையான பங்களிப்பை எப்பொழுதும் வழங்குவதாக நீங்கள் நினைக்கிறீர்களா? உங்களது விடையினை உதாரணங்களுடன் முன்வைக்குக. (10 புள்ளிகள்)

பிமை

05. (i) பகுத்தறிவு/தர்க்க ரீதியான செயல் (Rational action) என்றால் என்ன?
(02 புள்ளிகள்)

(ii) மக்ஸ்வெபர் பணிக்குழுவாட்சிகளின் தொழில்நுட்ப மேலாதிக்கத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த காரணத்தால், அதன் பல்வேறுபட்ட குறைபாடுகளைக் கவனிக்கத் தவறியமைக்காகவே விமர்சிக்கப்படுகின்றார். இக்கூற்றினை விளக்குக.
(03 புள்ளிகள்)

(iii) 'மக்ஸ்வெபர், மக்கள் தமது உலகினைப் பற்றி எவ்வாறு விளக்கிக் கூறினார்கள் என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வலியுறுத்தினார்'. அவரின் சமய ரீதியான நடத்தைகளின் பகுப்பாய்வில் கவனஞ் செலுத்தி இவ்வாதத்தை விளக்குக.
(10 புள்ளிகள்)

06. (i) புனிதத்துக்கும் புனிதமற்றதுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?
(02 புள்ளிகள்)

(ii) "சமயம் மக்களுக்கு ஒரு போதைப்பொருளைப் போன்றது" என்ற தனது பிரபல்யமான வாசகத்தின் ஊடாகக் கார்ல் மாக்ஸ் எதனைக் குறிப்பிடுகின்றார்?
(03 புள்ளிகள்)

(iii)செயற்பாட்டுவாதிகளின் கருத்தின்படி, சமயம் என்பது சமூகத்தின் ஒருமைப்பாட்டினைப் பலப்படுத்தும் திறனைக் கொண்டுள்ளது. இலங்கையில் 2019ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு சம்பவத்தினைப் புரிந்து கொள்வதற்கு இக் கோட்பாடானது எமக்கு உதவுகின்றதா? உதாரணங்களுடன் உமது விடையினை விளக்குக.
(10 புள்ளிகள்)

07. (i) ஒரே சமூக அடுக்கமைவினைச் சேர்ந்த மக்களை அடையாளப்படுத்தப் பயன்படுத்தப்படும் பண்புகள் எவை? (02 புள்ளிகள்)

(ii) ஒரு தனிநபரின் அடைந்து கொள்ளப்பட்ட சமூக அந்தஸ்துக்கும் பிறப்பினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சமூக அந்தஸ்துக்கும் இடையிலான வேறுபாடு என்ன?
(03 புள்ளிகள்)

(iii)இலங்கையர்கள் சமூகவெளியில் சாதியைப் பற்றி அரிதாகவே கலந்துரையாடுகின்றனர். எனினும், இன்றைய காலத்திலும் திருமணப் பொருத்தம் பார்க்கின்ற போது அதற்கு முன்னுரிமை கொடுத்தே பத்திரிகைகளில் பிரசுரிக்கின்றனர். அதனை ஏன் ஒரு விடயமாகக் கருதுகிறீர்கள்? கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

08. பின்வரும் சமூகவியல் எண்ணக்கருக்களை உதாரணங்களுடன் விளக்குக.

i. பாரம்பரியச் செயலும் பகுத்தறிவுச் செயலும் (03 புள்ளிகள்)
ii. கூட்டமும் கும்பலும் (Crowd and mob) (03 புள்ளிகள்)
iii. தன்னார்வக் குழுக்களும் (Voluntary groups) தன்னார்வத்தன்மையற்ற குழுக்களும் (03 புள்ளிகள்)
iv. கலாசாரமும் உப-கலாசாரமும் (03 புள்ளிகள்)
v. சமூகமயமாக்கலும் மீள்-சமூகமயமாக்கலும் (03 புள்ளிகள்)

*************